தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

**தீர்மானம் எண்: 217**

முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு மு.ஜெயபாண்டியன் அவர்கள் மறைவிற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1. தூத்துக்குடி மாநகராட்சிப் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக சென்னை மற்றும் இதர வெளியூர்களுக்கு சென்று வந்ததற்கான பயணத்தொகை மற்றும் இதரப் படிகள் ஆகியவற்றை உரிய விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு உடனுக்குடன் வழங்கவும், அதற்கான அதிகார அளிப்பை (தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம்) பிரிவு எண் 13இன்படி மாநகராட்சி ஆணையருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** மாமன்றம் ஆணையருக்கு அதிகார அளிப்பு வழங்க அனுமதிக்கலாம்.

நகஎண் 23193/08/பி4

**தீர்மானம் எண்: 218**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. இம்மாநகராட்சிக்கு 2008–09ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள் வாங்க ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று எழுதுபொருட்கள் வாங்கியதில் இதுவரை ரூ.4,26,062/– செலவிடப்பட்டுள்ளது. மேலும் இம்மாநகராட்சி பொது சீராய்வுக்காக எழுதுபொருட்கள் அதிக அளவில் வாங்கியதால் அதிக செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு தூத்துக்குடி பெண்கள் கூட்டுறவு பண்டகசாலையில் எழுதுபொருட்கள் வாங்கப்பட்டது. எனவே 2008–2009ஆம் ஆண்டிற்கு ஏற்படும் உத்தேச கூடுதல் செலவீனம் ரூ 4.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. உத்தேச கூடுதல் செலவினம் ரூ 4. 00 இலட்சத்தை அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சிக்கு தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பதிவேடுகள் கூட்டுறவு பண்டகசாலையில் வாங்குவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3. 2008–09ஆம் ஆண்டிற்குரிய மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தில் திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யலாம்.

பி7. 1571/2008

**<u>தீர்மானம் எண்: 219</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

3. இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 28–02–2007ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு எம். தயாளசிங் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி தொகை பிடித்தம் அதற்குரிய வட்டி மற்றும் மானியத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி வழங்கப்பட வேண்டியதுள்ளது.

| | |
|---|---|
| 1. <u>சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை பிடித்தம்</u><br>(01–11–89 முதல் 28–02–2002 முடிய மாதம் 20/– வீதம்<br>148 மாதங்கள்) | ரூ 2,960/– |
| 2) <u>அதற்குரிய வட்டித்தொகை</u><br>01–11–89 முதல் 28–02–2002 முடிய | ரூ 4550/– |
| 3) <u>சிறப்பு சேமநலநிதி மானியம்</u><br>(ந.நி,. ம,கு.,வ(ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு)<br>எண் 340 நாள் 08–08–2008ன்படி | ரூ 10,000/– |
| ஆக மொத்தம் | ரூ 17,510/– |

மேற்கண்ட தொகை ரூ 17,510/– (ரூபாய் பதினேழாயிரத்து ஐந்நூற்று பத்து மட்டும்) அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்

சி2. 25158/08

**<u>தீர்மானம் எண்: 220</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4) இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30–06–2007ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு எஸ். கச்சி முகைதீன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி தொகை பிடித்தம் அதற்குரிய வட்டி மற்றும் மானியத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி வழங்கப்பட வேண்டியதுள்ளது.

| | |
|---|---|
| <u>1.சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை பிடித்தம்</u><br>(01–03–86 முதல் 30–06–1998 முடிய மாதம் 20/– வீதம்<br>148 மாதங்கள்) | ரூ 2,960/– |

2) <u>அதற்குரிய வட்டித்தொகை</u>
01–03–86 முதல் 30–06–2007 முடிய ரூ 8451/–

3) <u>சிறப்பு சேமநலநிதி மானியம்</u>
(ந.நி,. ம,கு.,வ(ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு)
எண் 340 நாள் 08–08–2008ன்படி ரூ.10,000/–

----------

ஆக மொத்தம் ரூ. 21,411/–

----------

மேற்கண்ட தொகை ரூ 21,411/– (ரூபாய் இருபத்தொன்றாயிரத்து நானூற்று பதினொன்று மட்டும்) அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்

சி2. 25572/08

**<u>தீர்மானம் எண்: 221</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5. இம்மாநகராட்சிப் பகுதி தெற்கு காட்டன் ரோடு லயன்ஸ் டவுண் 4வது தெருவிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என திருமதி லியோனம்மாள் கொரைரா O.S.No. 188/04 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மேற்படி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேற்படி தெருவில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாக சாந்த குரூஸ் மற்றும் மூவர் தூத்துக்குடி சப்கோர்ட்டில் மேல் முறையீடு வழக்கு தொடார்ந்துள்ளார். மேற்படி மேல் முறையீடு வழக்கு எண் 103/08 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் திருமதி லியோனம்மாள் கொரைரா முதல் பிரதிவாதியாகவும், மாாகராட்சி ஆணையர் 2வது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மாநகர்மன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்

எப்1. 29808/08

**<u>தீர்மானம் எண்: 222</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6. நகராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள் மற்றும் தினக்கூலி பணியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களுக்கும் ஓய்வுபெறும் வயது 60 என குறிப்பிட்டு வரப்பெற்றுள்ள அரசாணை எண் 202 நாள் 16–10–2008 மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பதிவு செய்யலாம்

சி4. 29924/08

**<u>தீர்மானம் எண்: 223</u>**

பதிவு செய்யப்பட்டது

7. இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவின் மூலம் ஆட்டோ வாகனத்தை வைத்து கொசு புகை மருந்து தெளிக்க மன்ற தீர்மான எண் **111** நாள் **31–3–2008**ன்படி கடந்த மாதங்களில் நகரின் பல இடங்களில் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மழைக்காலத்தை முன்னிட்டு 3–12–2008 முதல் 6–01–2009 வரை 25 நாட்கள் ( டிசம்பர் 7, 9, 14, 21, 24, 25, 28, 31, ஜனவரி 2009 1, 4 தேதிகள் நீங்கலாக) அவசர அவசியம் கருதி புகை மருந்து தெளிக்க மன்ற முன் அனுமதியும் அதற்கான தோராயமான செலவுத்தொகை நாள் ஒன்றுக்கு ரூ 345/– வீதம் 25 நாட்களுக்கு ரூ 10000/–ம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** 1. அனுமதிக்கலாம்.
2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம். எச்4. 27055/08

**தீர்மானம் எண்: 224**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

8) தூத்துக்குடி மாநகராட்சி வி.இ. ரோடு வணிக வளாக கடை எண் 495, 496 ன் வாடகை மற்றும் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக திரு. ரத்தினவேல் மற்றும் திரு. கண்ணன் என்பவர் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. **9399** மற்றும் **9400/08**க்கு மாநகராட்சி சார்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு.கே.கடற்கரை அவர்கள் ஆஜராகவும் அது வகைக்குரிய செலவு தொகையை செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

அ**16**/ **25224**

**தீர்மானம் எண்: 225**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**9)** தூத்துக்குடி மாநகராட்சி ஜி.சி. ரோடு வணிக வளாக கடை எண் **8**ற்கு **15–10–2008**ல் நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | எஸ்.பிரின்ஸ் இம்மானுவேல்<br>61டி, மேலசண்முகபுரம் 7ம் தெரு, தூத்துக்குடி. | ரூ 651/–<br>(மாத வாடகை) |
| 2. | எஸ். ராதாகிருஷ்ணன்<br>41/1எ. கிருஷ்ணராஜாபுரம் 6ம் தெரு, தூத்துக்குடி | ரூ 540/–<br>(மாத வாடகை) |

**அலுவலகக் குறிப்பு:** –

G.C. ரோடு கடை எண் **8**க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு எஸ்.பிரின்ஸ் இம்மானுவேல் என்பவரின் மாத வாடகை ரூ.**651/–** பழைய மாத வாடகையை விட ரூ. **119/–** அருகில் உள்ள கடை எண் **7**ன் மாத வாடகை ரூ. **532/–** விட கூடுதலாக ரூ. **119/–** மற்றும் கடை எண் **9**இன் மாத வாடகை ரூ **532/–**ஐ விட கூடுதலாக ரூ.**119/–** உள்ளது. எனவே திரு. எஸ். பிரின்ஸ் இம்மானுவேல் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ **651/–**க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ**16/30085/2008**

**தீர்மானம் எண்: 226**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**10)** தூத்துக்குடி மாநகராட்சி G.C. ரோடு வணிக வளாக கடை எண் 13க்கு 15–10–2008ல் நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. சீனிவாசன்<br>113, ஜெயலாணிதெரு, தூத்துக்குடி. | ரூ 651/– (மாத வாடகை) |
| 2 | வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி<br>125 எ, சிவந்தாகுளம் ரோடு, தூத்துக்குடி. | ரூ.521/– (மாத வாடகை) |

<u>அலுவலகக் குறிப்பு</u>:

G.C. ரோடு கடை எண் 13க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு பி. சீனிவாசன் என்பவரின் மாத வாடகை ரூ 651/– முந்தைய மாத வாடகை ரூ 531/–ஐ விட கூடுதலாக ரூ 119/– அருகில் உள்ள கடை எண் 12ன் மாத வாடகை ரூ 532/–விட ரூ 119/– கூடுதலாகவும் மற்றும் கடை எண் 14இன் மாத வாடகை ரூ 532/– விட ரூ 119/– கூடுதலாக உள்ளது. எனவே திரு பி. சீனிவாசன் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ 651/– க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/30084/2008

**<u>தீர்மானம் எண்: 227</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**11)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 5வது இந்திய மக்கட் தொகை திட்டத்தில் பணிபுரிந்து வரும் 2 நலப் பார்வையாளர்கள் மற்றும் மகப்பேறு நலத் திட்டத்தில் பணிபுரிந்து வரும் 2 நலப்பார்வையாளர்களும் அரசாணை எண். 443 நிதித் (ஊதியக்குழு) துறை நாள் 17–10–2008ல் ஊதிய விகிதம் ரூ 4500–7000லிருந்து 5000–8000 ஆக திருத்தியமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**: அனுமதித்து பதிவு செய்து கொள்ளலாம்.

எச்1/28224/2008

**<u>தீர்மானம் எண்: 228</u>**

பதிவு செய்யப்பட்டது

**12)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மகப்பேறு மைய மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–4–2005ல் ஓய்வு பெற்ற திருமதி நளினி தாம்ஸன் என்பவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு சேமநலநிதி மான்யத் தொகை ரூ 5000/– போக தற்போது அரசால் மனுமதிக்கப்பட்ட தொகை ரூ 5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)த்தை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்

எச்1/29435/2008

**<u>தீர்மானம் எண்: 229</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13) இம்மாநகராட்சி பகுதி பாளையங்கோட்டை ரோடு மேற்கு பகுதியில் மாநகராட்சி சர்வே வார்டு சி. பிளாக் 43 சர்வே எண் 7ல் திரு. சுப்பையாத்தேவர் என்பவரால் நல்லதண்ணீர் கால்வாய் பகுதியில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை

அப்புறப்படுத்தக்கோரி இம்மாநகராட்சியிலிருந்து ந.க.எண்.ஜி1/2040/07 எண்ணிட்டு 20.06.08ல் அனுப்பப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து மேற்படி அறிவிப்புக்கு தடை உத்தரவு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றக் கிளை மதுரை உயர்நீதி மன்றத்தில் இம்மாநகராட்சியை 1ம் பிரதிவாதியாக சேர்த்து W.P.(M.D.)NO.7787-08 என்ற வழக்கு எண்ணில் இம்மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் தடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வழக்கினை உயர்நீதிமன்ற மாமன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.கடற்கரை,B.Sc.B.L. அவர்களிடம் ஒப்படைக்கவும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி3/28789/08

**<u>தீர்மானம் எண்: 230</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பாளையங்கோட்டை ரோடு மேற்கு ஆசிரியர் காலனி சந்திப்பில் உள்ள வேப்பமரம் மற்றும் 2ம் கேட் சமீபம் சத்திரம் தெருவில் உள்ள வேப்பமரம் பொது ஏலம் 19–11–08ல் விடப்பட்டது இவ் ஏலத்திற்கு ஏலம் கோர யாரும் முன்வராததால் 5–12–08ல் பொது ஏலம் விடப்பட்டது,. இவ் ஏலத்தில் மூன்று நபர்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள். இதில் திரு. கே.வி. மாரியப்பன் அவர்கள் உச்ச கேள்வியாக ரூ 5100/– ஏலம் கோரியுள்ளார். இவ் ஏலத்தொகை அதிகமாக உள்ளதால் இதனை ஒப்புதல் அளிக்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>குறிப்பு:</u>** 1) மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) மாமன்ற அனுமதி எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்ய உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

இ5/28635/08

**<u>தீர்மானம் எண்: 231</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

15) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலைய மின்மோட்டார்கள் மின் துவக்கிகள் டிராடன்ஸ்பார்மர்கள், ஜெனரேட்டர் அனைத்து மின்சாதன பொருட்களையும் வருடாந்திர மின் ஆய்வு செய்யும் பணிக்காக மின் ஆய்வாளர் தூத்துக்குடி அவர்களுக்கு ரூ 3275/–ஐ செலுத்துவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/28484/03

**<u>தீர்மானம் எண்: 232</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16) இம்மாநகராட்சி பகுதியில் குடிநீர் மேம்பாடு பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.161543/–ஐ கீழ்க்கண்ட விபரப்படி என்த்ரால் கம்யூனிகேசன் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | பிசினஸ் ஸ்டான்டர்ட் | 06.09.2008 | 4534/– |
| 2. | மதுரை மணி | 06.09.08 | |
| 3. | பைனான்சியல் எக்ஸ்பிரஸ் | 21.09.08 | 81731/– |
| 4. | தினத்தந்தி | 21.09.08 | |
| 5. | பைனான்சியல் எக்ஸ்பிரஸ் | 16.10.08 | 75278/– |
| 6 | தினத்தந்தி | 16.10.08 | |
| | **மொத்தம்** | | **161543/–** |

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**இ3/7356/06**

**தீர்மானம் எண்: 233**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17) இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு தே.கனியூட்ராஜா (த.ப.நீ) என்பவர் மீது அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமான அறிவிப்பை அன்னாரால் சமர்ப்பிக்கப்பட்ட முகவரியில் சார்வு செய்த பொழுது அன்னார் குடியிருப்பை காலி செய்து விட்டதால் சார்வு செய்ய இயலாததாலும், வேறு விலாசம் மேற்படியார் தெரிவிக்காததினாலும் அறிவிப்பினை தபால் மூலம் சார்பு செய்ய இயலாமல் திரும்ப பெறப்பட்டதாலும், அறிவிப்பினை கதவில் ஒட்டி சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில் அன்னாருக்கு மேற்படி அறிவிப்பினை தெரிவிக்கும் விதமாக தினமலர் மற்றும் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்து அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பினை விளம்பரம் செய்த வகையில் உரிய செலவினம் ரூ.1992 + 900=2892/–ஐ வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம் சி1/18807/03

**தீர்மானம் எண்: 234**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18) இம்மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள Xerox மெசின் பழுதடைந்து உள்ள காரணத்தினால் மேற்படி பழுதினை சரி செய்ய கீழ்க்கண்ட விவரப்படி புதியதாக உபகரணங்கள் மாற்றி சரிசெய்ய வேண்டி உள்ளது. எனவே மேற்படி Xerox மிசின் அங்கீகாரம் பெற்ற டீலர் M/s. பிரண்ட்ஸ் கம்யூட்டர், திருநெல்வேலி நிறுவனத்தால் நேரடியாக வாங்கி பொருத்தவும், அதற்கான செலவுத் தொகை ரூ.11,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) Drum - 1 No.
2) Cleaning Blade - 1 No.
3) Hot Roller - 1 No.
4) Therminator - 2 No.
5) Pressure Roller bush - 2 No.
6) Toner 1230D Black - 1 No.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**இ1/3334/07**

**தீர்மானம் எண்: 235**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19) தூத்துக்குடி மாநகராட்சி மீனாட்சிபுரம் மேற்கு தெரு நகரளவு வார்டு 4, பிளாக் எண் 29 நகரளவு எண் 3909/1 பகுதி மற்றும் நகரளவு வார்டு 4, பிளாக் எண் 21ஏ, நகரளவு எண் 3464/1ன் இடங்களில் நகரளவு எண் 3464/1 இடம் அரசால் இணக்கமளிக்கப்பட்ட தூத்துக்குடி முழுமைத் திட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பகுதியிலும், நகரளவு எண் 3909/1 இடம் ஒப்புதல் பெறப்பட்ட 'ஏ' பாகம் I விரிவு அபிவிருத்தி திட்டத்தில் சாலையிலிருந்து 100 மீட்டர் தூரத்திற்கு வணிக பகுதியாக உள்ளவற்றை பொது உபயோக பகுதியாக (Public and Semi-Public land use) நிலமாற்றம் செய்ய வேண்டி தலைவர், கோவல் டிரஸ்ட் அரவிந்த் கண் மருத்துவமனை என்பவரிடமிருந்து அரசு செயலாளர் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களுக்கு உரிய வழிமுறையாக விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நில உபயோக மாற்றம் செய்ய கோரியுள்ள விண்ணபத்தினை தூத்துக்குடி உள்ளூர் திட்ட குழுமம் உறுப்பினர் செயலாளர் வழியாக அரசிற்கு உரிய அனுமதி வேண்டி மேலனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மாமன்றம் அனுமதிக்கலாம்

எப்1/26801/08

**<u>தீர்மானம் எண்: 236</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20) இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 57, 1992 முதல் 2001 முடிய உரிமம் பெற்ற திரு. மணி வண்ணன் என்பவர் பெயரில் வைப்பு தொகை ரூ 5000/– மற்றும் ( CH. 732 நாள் 10–9–1992) கூடுதல் வைப்புத் தொகை ரூ 3400/– (CH. 733 நாள் 10–9–1992) உள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. மணிவண்ணன் தொடர்ந்த வழக்கு எண். W.P. 3433/03ன் உத்தரவில் ரூ 35000/–ஐ செலுத்த உத்தரவிட்டதன் பேரில் அன்னார் ரூ 35000/–ஐ செலுத்தியுள்ளார். மேற்படி தொகையுடன் மேற்கண்ட கடைக்கு ரூ.43400/– காலங்கடந்த வைப்புத்தொகையாக உள்ளது. மேற்படி தொகையினை புதிய பேருந்து நிலைய கடை எண் 57ன் வாடகை நிலுவைக்கு ஈடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – காலங்கடந்த வைப்புத்தொகை ரூ 43400/–ஐ வாடகை பாக்கிக்கு ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/17075/2006

**<u>தீர்மானம் எண்: 237</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21)தூத்துக்குடி மாநகராட்சி வணிகவளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடைகளில் தற்போது நடத்தி வரும் அனுபோகம் இல்லாத உரிமதாரர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை அரசாணை எண் 92 நாள் 03/07/2007ன் படி 12மாத வாடகை பெயர் மாற்ற கட்டணம் மற்றும் 12மாத வாடகை வைப்பு தொகை செலுத்தி உரிமம்தாரரின் பெயரை மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்துள்ள கீழ்க்கண்ட நபர்களின் மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | கடை எண் | பழைய உரிமம்தாரரின் பெயர் | தற்போதைய உரிமம்தாரரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1 | 118/1 | பழையபேருந்து நிலையம்<br>ந. கிருஸ்ணசாமி<br>15'X9' (வாரிசு) | ந.கி. அன்னராஜன்,<br>36பி/10டுவிபுரம் 1ம் தெரு,<br>தூத்துக்குடி. |

| | | | |
|---|---|---|---|
| 2 | 118/3 | ஏ.எஸ். மாரியப்பன்<br>10'X7' | ஏ. மணிமாறன்,<br>36பி/10 டுவிபுரம் 1ம் தெரு<br>தூத்துக்குடி. |
| 3 | பொருள் பாதுகாப்பு அறை | புதியபேருந்து நிலையம் பாக்கியம் | பி. இசக்கிமுத்து<br>162டி.மகிழ்ச்சிபுரம்<br>தூத்துக்குடி. |

**அலுவலகக் குறிப்பு – 1** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை எண். 92 நாள் 03/07/2007ன் படி பட்டியல் 1இல் கண்டுள்ள நபர் பெயர் மாற்ற கட்டணமாக ரூ.500/– மற்றும் 12 மாத வாடகையும் வரிசை எண்.2 மற்றும் 3இல் கண்டுள்ள நபர்கள் 12மாத வாடகையும் பெயர் மாற்ற கட்டணமும் மற்றும் 12 மாத வாடகை முன் வைப்பு தொகையும் செலுத்தியுள்ளதால் கலம் எண் 2ல் கண்டுள்ள கடைகளுக்கு கலம் 3ல் கண்டுள்ள பெயரில் இருந்து கலம் எண் 4ல் கண்டுள்ள பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2.கலம் 2ல் கண்டுள்ள கடை வாடகை நிலுவைக்கு கலம் 3ல் கண்டுள்ள உரிமம்தாரர்கள் பெயரில் உள்ள காலம் கடந்த வைப்பு தொகையில் உள்ள முன்வைப்பு தொகையில் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/24404/2007

<u>**தீர்மானம் எண்: 238**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.

மாமன்றம், தூத்துக்குடி.
நாள் 23–12–2008